**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 116/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.3** |
| Name : | **திரு. தனராஜ்** |
| Father's Name/Husband Name: | **திரு. பச்சமுத்து** |
| Village : | மருதடி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 70/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–98வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆடு மேய்த்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 விஜயலெட்சுமி என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து நான் போட்டது தான். நான் டீக்குடிக்க சென்ற போது, எனது வீட்டு வாசலில் எஸ்ஐ சார் என்னிடம் கையொப்பம் கேட்டார். எதற்காக கேட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவர் கேட்டுக் கொண்டதன்பேரில் நான் கையொப்பம் போட்டேன். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd-xxxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.